**நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,மணப்பாறை**
**முன்னிலை: திரு. இரா. அசோக்குமார், B.Com, B.L. ,**
**நீதித்துறை நடுவர், மணப்பாறை.**
**2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 02–ம் நாள் வியாழக்கிழமை**
**STC.No. 61/2024**
**(CNR NO. TNTP10-000845-2024)**

V. மாணிக்கவாசகம்,
த/பெ. வெங்கடாசலம், ... குற்றமுறையிடுபவர்

/எதிர்/

S. சுனிதா,
க/பெ. செல்வவிநாயகம் ... எதிரி

**<u>மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138 வழக்குகளில் சரிபார்ப்பு பட்டியல்</u>**

| | | |
|---|---|---|
| 1. | ஆள்வரை உள்ளதா: | ஆம். |
| 2. | காசோலை எண்: | 035713 |
| 3. | கடன் கொடுத்த தேதி: | 22.08.2023 |
| 4. | காசோலை தொகை: | ரூ.4,60,000/- |
| 5. | நீதிமன்ற கட்டணம்: | ரூ.2,300/- paid |
| 6. | காசோலை தேதி: | 20.11.2023 |
| 7. | வசூலுக்கு செலுத்தப்பட்ட தேதி: | 22.11.2023 |
| 8. | திருப்பப்பட்ட தேதி: | 23.11.2023 |
| 9. | அறிவிப்பு அனுப்பப்பட்ட தேதி: | 12.12.2023 |
| 10. | அறிவிப்பு | 18.12.2023 |

| | | |
|---|---|---|
| | பெற்றுக்கொள்ளப்பட்ட தேதி: | |
| 11. | பதில் அறிவிப்பு தேதி: | – |
| 12. | புகார் தேதி: | – |
| 13. | காலதாமதம்: | இல்லை |
| 14 | காலதாமதத்தை ஏற்றுக் கொள்ள மனு தாக்கல்: | இல்லை |
| 15 | தரப்பினர்களின் பெயர், வயது மற்றும் முகவரி: | **புகார்தாரர்**<br>V. மாணிக்கவாசகம் (வயது 28/2024)<br>த/பெ. வெங்கடாசலம்,<br>கதவு எண்.5/22, நல்லாம்பிள்ளை புதூர்,<br>நல்லாம்பிள்ளை கிராமம்,<br>மணப்பாறை வட்டம்,<br>திருச்சி மாவட்டம்.<br><br>**எதிரி**<br>**நிலையான முகவரி**<br>S. சுனிதா (வயது 44/2024)<br>க/பெ. செல்வவிநாயகம்,<br>கதவு எண்.1, காமராஜர் (விஸ்தரிப்பு),<br>அரியூர் இரயில்வே கேட் அருகில்,<br>தொரப்பாடி, வேலூர் மாவட்டம்.<br>**வேலை பார்க்கும் முகவரி**<br>பேராசிரியர் வேதியியல் துறை,<br>முத்துரங்கம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,<br>ஓட்டேரி ரோடு,<br>வேலூர் மாவட்டம். |
| 16 | வழக்கறிஞர் விவரம் | புகார்தாரருக்காக<br>திரு. U. விஜய் |

| | | |
|---|---|---|
| | | எதிரிக்காக<br>திரு. K. சிவகுரு |
| 17 | ஆவணங்கள் | **புகார்தாரர் தரப்பில்**<br><br>1. 20.11.2023–ம் தேதியிட்ட காசோலை அசல் ம.சா.ஆ.1<br><br>2. 22.11.2023–ம் தேதியிட்ட ரிட்டன் மெமோ ம.சா.ஆ.2<br><br>3. 12.12.2023–ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு ம.சா.ஆ.3<br><br>4. 18.12.2023–ம் தேதியன்று மேற்டி அறிவிப்பை எதிரி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை ம.சா.ஆ.4.<br><br>5. 21.12.2023–ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு Unclaimed என்று திருப்பப்பட்டதற்கான அஞ்சலக உறை ம.சா.ஆ.5.<br><br>**எதிரி தரப்பில்**<br><br>1. எதிரி காவல்நிலையத்தில் கொடுத்த புகார் எம.சா.ஆ.1<br><br>2. CSR (புகார் மனு ஏற்புச்சான்றிதழ் எம.சா.ஆ.2. |

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் கடந்த 08.02.2024–ம் தேதி கோப்புக்கு எடுக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வந்து 17.06.2026–ம் தேதி இறுதி விசாரணைக்காக இந்நீர் நீதிமன்ற முன்பாக வந்தபோது புகார்தாரர் தரப்பில் திரு. U. விஜய் அவர்கள் ஆஜராகியும் எதிரி தரப்பில் திரு. K. சிவகுரு

அவர்கள் ஆஜராகியும் இரு தரப்பு வாதங்களை கேட்டும் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதனால் வரை நீதிமன்றத்தில் ஆழ்ந்த பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று 02.07.2026–ஆம் தேதி இறுதியாக நீதிமன்றம் வழங்கும்...

**தீர்ப்புரை**

இவ்வழக்கானது புகார்தாரரால் குற்றவியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 200 செய்யப்பட்டு பிரிவு 138 மாற்றுமுறை ஆவண சட்டத்தின் படி எழுந்த வழக்காகும்.

**2. குற்ற புகாரின் சுருக்கம்**

இவ்வழக்கின் புகார்தாரரும், எதிரியும் குடும்ப ரீதியாக பழக்கம் ஏற்பட்டு குடும்ப நண்பர்கள் என்ற அடிப்படையில் எதிரியின் குடும்ப செலவிற்காகவும், சில்லரைக்கடன்களை தீர்ப்பதற்காகவும், கைமாற்றுக்கடனாக பணம் தேவைப்படுவதாக கூறி ரூ.4,60,000/–பணம் கேட்டு 22.08.2023ம் தேதியன்று பெற்று கொண்டதாகவும், அன்றைய தினமே பின்தேதியிட்டு ஸ்டேட் பாங்க் ஆப் இந்திய வேலூர் கிளை காசோலையை காசோலையை பூர்த்தி செய்து 20.11.2023ம் தேதியன்று வசூலுக்கு தாக்கல் செய்யும்படி கொடுத்தார் என்றும், எதிரியின் உத்தரவாதத்தின் பேரில் 20.11.2023 அன்று புகார்தாரர் கணக்கு வைத்துள்ள இந்தியன் வங்கி, மணப்பாறை கிளையின் கணக்கு எண்.6064702435–க்கு காசோலை எண்.035713 என்ற எண்ணுள்ள காசோலையை வசூலுக்காக தாக்கல் செய்தபோது மேற்படி காசோலை கடந்த 23.11.2023ம் தேதியன்று (Exceed Arrangement) என்ற காரணம் கூறி திருப்பப்பட்டுவிட்டது என்றும், இது குறித்து புகார்தாரர் கடந்த 12.12.2023–ம் தேதியன்று நிலையான முகவரிக்கும் மற்றும் அலுவலக முகவரிக்கும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும் மேற்படி அறிவிப்பை எதிரியாகிய நீவிர்

கடந்த 18.12.2023ம் தேதியன்று வேலைப்பார்க்கும் முகவரியில் பெற்றுக் கொண்டு, நிலையான முகவரிக்கு அனுப்பிய அறிவிப்பை 21.12.2023 அன்று வாங்க மறுத்துள்ளார் என்றும், மேற்படி கடன் தொகையை நாளது தேதிவரை திருப்பி செலுத்தாமல் இருந்து புகார்தாரரை ஏமாற்றும் நோக்குடன் செயல்பட்டதாக எதிரி மீது மாற்று முறை ஆவணச்சட்டம் பிரிவு 138 இன் கீழ் தண்டனைக்குரிய குற்றம் இழைத்துள்ளார் என்றும், இவ்வழக்கை புகார்தாரர் எதிரிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார்.

3. இவ்வழக்கில் மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138 கீழ் நடவடிக்கை தொடர போதிய முகாந்திரம் இருந்ததால் வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 204(3)–ன் படி புகார் நகலுடன் அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையானதும் எதிரியிடம் குற்றவியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 251–ன் கீழ் குற்றச்சாட்டு குறித்து விளங்கிய போது எதிரி குற்றத்தை மறுத்தார் அதை பதிவு செய்து கொண்டு புகார்தாரர் தரப்பு சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**4. விசாரணை:**

புகார்தாரர் தனது பிரமாண உறுதி கூற்று தாக்கல் செய்து அதன் மூலம் மனுதாரர் சாட்சி ஒன்றாக விசாரணை செய்யப்பட்டுள்ளார். புகார்தாரர் தரப்பில் மா.சா.ஆ.1 முதல் மா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் எதிரி எம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலம் எம.சா.ஆ.1 மற்றும் எம.சா.ஆ.2 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிக்கு எதிராக உள்ள பாதகமான சாட்சியங்கள் குறித்து

குற்றவியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 313 (1) (ஆ)ன் படி கேள்வி கேட்டபோது எதிரி பொய் சாட்சி என்று கூறினார். இருதரப்பு கேட்கப்பட்டது.

**5. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை:**

இவ்வழக்கில் எதிரி மீதான குற்றச்சாட்டப்பட்டுள்ள குற்றம் இந்திய மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 138-ன் படி சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்வு கூறிய பிரச்சினை ஆகும்.

**6. தீர்வு**

(6.1). இவ்வழக்கின் புகார்தாரரும், எதிரியும் குடும்ப ரீதியாக பழக்கம் ஏற்பட்டு குடும்ப நண்பர்கள் என்ற அடிப்படையில் எதிரியின் குடும்ப செலவிற்காகவும், சில்லரைக்கடன்களை தீர்ப்பதற்காகவும், கைமாற்றுக்கடனாக பணம் தேவைப்படுவதாக கூறி ரூ.4,60,000/-பணம் கேட்டு 22.08.2023ம் தேதியன்று பெற்று கொண்டதாகவும், அன்றைய தினமே பின்தேதியிட்டு ஸ்டேட் பாங்க் ஆப் இந்திய வேலூர் கிளை காசோலையை காசோலையை பூர்த்தி செய்து 20.11.2023ம் தேதியன்று வசூலுக்கு தாக்கல் செய்யும்படி கொடுத்தார் என்றும், எதிரியின் உத்தரவாதத்தின் பேரில் 20.11.2023 அன்று புகார்தாரர் கணக்கு வைத்துள்ள இந்தியன் வங்கி, மணப்பாறை கிளையின் கணக்கு எண்.6064702435-க்கு காசோலை எண்.035713 என்ற எண்ணுள்ள காசோலையை வசூலுக்காக தாக்கல் செய்தபோது மேற்படி காசோலை கடந்த 23.11.2023ம் தேதியன்று (Exceed Arrangement) என்ற காரணம் கூறி திருப்பப்பட்டுவிட்டது என்றும், இது குறித்து புகார்தாரர் கடந்த 12.12.2023-ம் தேதியன்று நிலையான முகவரிக்கும் மற்றும் அலுவலக முகவரிக்கும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும் மேற்படி அறிவிப்பை எதிரியாகிய நீவிர் கடந்த 18.12.2023ம் தேதியன்று வேலைப்பார்க்கும் முகவரியில் பெற்றுக்

கொண்டு, நிலையான முகவரிக்கு அனுப்பிய அறிவிப்பை 21.12.2023 அன்று வாங்க மறுத்துள்ளார் என்றும், மேற்படி கடன் தொகையை நாளது தேதிவரை திருப்பி செலுத்தாமல் இருந்து புகார்தாரரை ஏமாற்றும் நோக்குடன் செயல்பட்டதாக எதிரி மீது மாற்று முறை ஆவணச்சட்டம் பிரிவு 138 இன் கீழ் தண்டனைக்குரிய குற்றம் இழைத்துள்ளார் என்றும், இவ்வழக்கை புகார்தாரர் எதிரிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார்.

6.2). மாண்புமிகு உச்ச நீதிமன்றம் **kusum ingots and alloys limited** மாற்று முறை ஆவணச்சட்டம் பிரிவு 138–ன் படியான குற்றத்திற்கு கீழ்க்கண்ட உட்கூறுகளால் நிரூபிக்கப்பட்டு இருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது .

i) Person must have drawn a cheque on an account maintained bank for payment of certain amount of money to another person from out of that account.
ii) The cheque should have been, issued for discharge, in whole or in part of any debt or other liability.
iii) That cheque has been presented to the bank with in a period of three months from the date of which it is drawn or within the period of its validity whichever is earlier.
iv) That cheque is returned by the bank unpaid, either because of the amount of money standing to the credit of the account is insufficient to honour the cheque or that if exceeds the amount arranged to be paid from that account by an agreement made with the bank.
v) The payee or the holder in due course of the cheque makes a demand for the payment of the said amount of money by giving a notice in writing, to the drawer of the cheque, within 30 days of the receipt or information by him from the bank regarding the return of the cheque as unpaid.
vi) The drawer of Such cheque fails to makes payment of the said amount of money to the payee or the holder in due course of the cheque within 15 days of the receipt of the said notice.

ஆறு உட்கூறுகளை புகார்தரப்பில் நிரூபிக்கப்பட்டிருந்தால் மட்டுமே எதிரி மீதான குற்றம் மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138 முக்கிய முதல் நிலை கடப்பாடு initial Burden நிரூபிக்கப்பட்டதாகும்.

(6.3). புகார்தாரர் தரப்பில் தன்னை ம.சா.1.ஆக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து அவர் மூலமாக 20.11.2023–ம் தேதியிட்ட காசோலை அசல் ம.சா.ஆ.1 ஆகவும், 22.11.2023–ம் தேதியிட்ட ரிட்டன் மெமோ ம.சா.ஆ.2 ஆகவும், 12.12.2023–ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு ம.சா.ஆ.3 ஆகவும், 18.12.2023–ம் தேதியன்று மேற்படி அறிவிப்பை எதிரி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை ம.சா.ஆ.4 ஆகவும், 21.12.2023–ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு Unclaimed என்று திருப்பப்பட்டதற்கான அஞ்சலக உறை ம.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

(6.4) மேற்படி புகார்தாரருக்கு ஆதரவாக இந்த நீதிமன்றம் செய்துள்ள சட்டபூர்வமான அனுமானத்தை எதிரி தரப்பில் மறுத்தளிக்கப்பட்டுள்ளதா? என்பதை பரிசீலித்து பார்க்கும்போது, எதிரி தரப்பில் செய்யப்படும் எதிர்வாதம் யாதெனில் வாதியானவர் யார் என்று தனக்கு தெரியாது என்றும் எனது கணவர் செல்வ விநாயகம் என்பவருக்கும், ஆறுமுகம் என்பவருக்கும் ஏற்பட்ட வரவு செலவு இருந்து வந்துள்ளது. அதன் காரணமாக எனது கணவரிடம் ஆறுமுகம் என்பவர் நான் கையெழுத்து ஏதும் இல்லாமல் வெறுமனே வைத்திருந்த காசோலை எனது கணவரிடம் இருந்து பெற்று நான் அரசு ஊழியராக இருப்பதால் என்னிடம் பணம் பறிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்று எதிர்வாதம் செய்துள்ளார்.

(6.5) புகார்தாரர் தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் எதிரி மணப்பாறையில் உள்ள எனது வீட்டில் வந்து வாங்கினார் என்றால் ஆமாம். 22.08.2023 அன்று எனது வீட்டில் வந்து வாங்கினார். ஆறுமுகம் என்பவரது சகோதரர் செந்தில்குமார் வசித்து வருகிறார் என்றால் சரிதான். எதிரி என்னிடம் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. எதிரியின்

கணவர் செல்வவிநாயகத்திற்கும், ஆறுமுகத்திற்கும் ஏற்பட்ட வரவு செலவு பிரச்சனையில் எதிரியின் கணவர் எதிரியின் காசோலை எடுத்து ஆறுமுகத்திடம் கொடுத்துள்ளார் என்றும், இந்த வழக்கு காசோலையில் தாங்களாகவே கையொப்பம் செய்து கொண்டு நீதிமன்றத்தை ஏமாற்றி சட்ட விரோதமாக எதிரியிடமிருந்து வசூல் செய்யும் நோக்கத்தோடு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல என்று சாட்சியம் அளித்துள்ளார்.

(6.6) எதிரி தரப்பில் திருமதி. சுனிதா என்பவர் விசாரணை செய்யப்பட்டு, அவரது தரப்பில் இரண்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேலும் எதிரியானவர் தன்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தில் ஆறுமுகம் என்பவர் நான் வேலை பார்க்கும் கல்லூரிக்கு வந்து உனது கணவர் கடன் வாங்கியுள்ளார். அந்த கடனை நீதான் செலுத்த வேண்டும், இல்லை என்றால் உன்னை கல்லூரி முதல்வரிடம் சக நபர்களிடம் கூறி அசிங்கப்படுத்துவேன் என்று சொன்னார் என்றும், தொடர்ச்சியாக என்னை கல்லூரியில் வந்து தொந்தரவு செய்ததால் நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் அந்த புகார் எம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், புகார் மனு ஏற்பு சான்றிதழ் எம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பணம் சம்பந்தப்பட்டது ஏதுவாக இருந்தாலும் வழக்கு தொடுத்து பார்த்துக் கொள்ளுங்கள் என்று காவல் நிலையத்தில் சொன்னார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

(6.7) புகார்தாரர் எதிரிக்கு தனது வழக்கறிஞர் மூலம் 12.12.2023 ஆம் தேதியன்று வழக்கறிஞர் அறிவிப்பினை அனுப்பியுள்ளார். அந்த அறிவிப்பானது எதிரியானவர் பெற்றுக்கொள்ளாமல் திரும்ப வந்துள்ளது. மேலும் எதிரியானவர் வழக்கு தாக்கல் செய்து சுமார் ஒன்றரை ஆண்டுகள் கழித்து வழக்கு காசோலைகள் தனது கணவர் தனக்குத் தெரியாமல் எடுத்துச் சென்று ஆறுமுகம்

என்பவரிடம் கொடுத்து விட்டதாகவும், வழக்கு காசோலைக்கும் தமக்கும் எந்தவிதமான சம்பந்தம் இல்லை என்றும், ஆறுமுகம் தன்னை மிரட்டி வருவதாகவும் அதன் பேரில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் வழக்கு காசோலையில் உள்ள கையெழுத்து தன்னுடையது இல்லை என்பதை நிரூபிப்பதற்காக எந்தவிதமான முயற்சியும் எடுக்கவில்லை. மேலும், வழக்கு காசோலையை புகார்தாரர் மோசடியாக எதிரி மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று எந்தவிதமான புகாரோ அல்லது புகார்தாரர் மீது எந்தவிதமான சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என தெரிகின்றது. வெறுமனே வழக்கு காசோலை தான் வழங்கவில்லை என்று எடுத்துள்ள எதிரியின் வாதமானது ஏற்றுக்கொள்ள வகையில் இல்லை. மேலும், எதிரி தரப்பில் வழக்கு காசோலையை புகார்தாரரிடம் வழங்கவில்லை என்பதை நிரூபிக்கும் வகையில் எந்தவிதமான சாட்சியமோ சான்றாவனங்களோ இந்த வழக்கில் எதிரியால் தாக்கல் செய்யவில்லை. எனவே, எதிரி எடுத்துள்ள எதிர் வாதமானது நிராகரிக்ககூடிய வகையிலேயே அமைந்துள்ளது.

2008 ( 4 ) SCC பக்கம் 530

Mere the denail of signature is not enough the party allerging forgery must substantiative it through acceptable evidence

Sokka lingam versus manicka vasagam

2016 (2) MWN Civil 225

When the defendent denial signature but does not produce any expert Proof. the denial cannot be accepted

M. Gomathy Shankar versus Sumathi

Rebuttable presumption–mere Denial is not enough and accused must cogent and creditable evidence. Mere denial is not sufficient.

(6.8) எதிரியானவர் புகார்தாரர் தன்னை மிரட்டியதாகவோ, புகார்தாரரிடம் கடன் வாங்கவில்லை என்றும், எதிரியின் காசோலையை புகார்தாரர் திருடி சென்றுவிட்டார் என்றும், எந்தவிதமான புகாரோ அல்லது சட்ட நடவடிக்கையோ எடுத்ததாக தனது சாட்சியத்தின் வாயிலாக நிரூபிக்க தவறிவிட்டார்.

(6.9) எதிரியின் கணவர் எதிரியின் காசோலையை எதிரிக்கு தெரியாமல் எடுத்துச்சென்று ஆறுமுகம் என்பவரிடம் கொடுத்து, ஆறுமுகத்தின்மூலம் புகார்தாரர் பெற்று இந்த வழக்கை புகார்தாரர் மோசடியாக நிரப்பி வசூலுக்கு செலுத்தியுள்ளார் என்று எதிர்வாதம் செய்யும் நிலையில், தற்போதுவரை மேற்படி புகார்தாரர் மீது காவல்துறையில் புகார் அல்லது எந்த விதமான சட்ட நடவடிக்கையில் எடுத்ததாக தெரியவில்லை. எதிரி தரப்பில் செய்யப்படும் எதிர்வாதங்கள் தகுந்த சாட்சியங்கள் வாயிலாக சாத்திய கூறுகள் அடிப்படையில் மெய்ப்பிக்கபடாதபோது புகார்தாரர் தனது வழக்கை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**7. Section 138 inThe Negotiable Instruments Act, 1881**

**138 Dishonor of cheque for insufficiency, etc., of funds in the account.**

Where any cheque drawn by a person on an account maintained by him with a banker for payment of any amount of money to another person from out of that account for the discharge, in whole or in part, of any debt or other liability, is returned by the bank unpaid, either because of the amount of money standing to the credit of that account is insufficient to honour the cheque or that it exceeds the amount arranged to be paid from that account by an agreement made with that bank, such person shall be deemed to have committed an offence and shall, without prejudice to any other provisions of this Act, be punished with imprisonment for 19 (a term which may be extended to two years), or with fine which may extend to twice the amount of the cheque, or with both: Provided that nothing contained in this section shall apply unless--

(a) The cheque has been presented to the bank within a period of six Months form the date on which it is drawn or within the period of its validity, whichever is earlier,

(b) the payee or the holder in due course of the cheque, as the case maybe, makes a demand for the payment of the said amount of money bygiving a notice in writing, to the drawer of the cheque, 20 (within thirtydays) of the receipt of information by him form the bank regarding thereturn of the cheque as unpaid: and

(c) The drawer of such cheque fails to make the payment of the saidamount of money to the payee or, as the case may be, to the holder in duecourse of the cheque, within fifteen days of the receipt of the said notice.

Explanation - for the purposes of this section, "debt or other liability" means a legally enforceable debt or other liability.

(7.1). புகார்தாரர் தரப்பில் Ex.P1 to Ex.P5 என 5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. புகார்தாரர் தரப்பில் PW1 விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

**8. மாற்று முறையாவணச் சட்டம் பிரிவு 118 பின்வருமாறு:**

Sec 118 Presumption as to negotiable instruments. - Until the contrary is proved, the following presumptions shall be made:-
(a) of consideration - that every negotiable instrument was made or drawn for consideration, and that every such instrument, when it has been accepted, indorsed, negotiated or transferred, was accepted, indorsed, negotiated or transferred for consideration:
(b) as to date - that every negotiable instrument bearing a date was made or drawn on such date;
(c) as to time of acceptance - that every accepted bill of exchange was accepted within a reasonable time after its date and before its maturity;
(d) as to time of transfer - that every transfer of a negotiable instrument was made before its maturity;
(e) as to order of endorsements - that the endorsements appearing upon a negotiable instrument were made in the order in which they appear thereon;
(f) as to stamps - that a lost promissory note, bill of exchange or cheque was duly stamped;

(g) that holder is a holder in due course - that the holder of a negotiable instrument is a holder in due course:

Provided that, where the instrument has been obtained from its lawful owner, or from any person in lawful custody thereof, by means of an offence or fraud, or has been obtained form the maker or acceptor thereof by means of an offence or fraud, or for unlawful consideration, the burden of proving that the holder is a holder in due course lies upon him.

**9. Section 139 in The Negotiable Instruments Act, 1881**

139. Presumption in favour of holder. I shall be presumed, unless the contrary is proved, that the holder of a cheque received the cheque of the nature referred to in section 138 for the discharge, in whole or in part, of any debt or other liability.

**(9.2).மாண்புமிகு உச்ச நீதிமன்றம் மாற்று முறையாவணைச் சட்டம் பிரிவுகள் 118 மற்றும் 139 க்கு பின்வருமாறு நெறிமுறைகளை அறிவுறுத்தியுள்ளது.**

(9.3).In **Hiten P.Dalal Vs Bratindranath Banerjee, 2001 (6) SCC 16**, the

Hon'ble Supreme Court held that " both Sections 138 and 139 require that the court shall presume the liability of the drawer of the cheques for the amounts for which the cheques are drawn".

(9.4). In **Laxmi Dyechem Vs State of Gujarat and others, 2012 (13) SCC 375,** the Hon'ble Supreme Court reiterated that **in view of Section 139, it has to be presumed that a cheque was issued in discharge of a debt or other liability** but the presumption could be rebutted by adducing evidence. The burden of proof was however on the person who wanted to rebut the presumption. However, this presumption coupled with the object of Chapter XVII of the Act leads to the conclusion that by countermanding payment of postdated cheque, a party should not be allowed to get away from the penal provision of Section 138 of Negotiable Instruments Act.

(9.5).In **C.Keshavamurthy v.H.K.Abdul Zabbar, 2013 4 Crimes (SC) 393**

rendered by the Hon'ble Apex Court and the relevant passage would run thus:
"9. ... The judgment clearly held that the presumption under section 139of the Negotiable Instruments Act 1881, includes the presumption of existence at a legally enforceable debt or liability. That presumption is required to be honoured, and if it is not so done, the entire basis of making these provisions will be lost. Therefore, it has been held that it is for the accused to explain his case and defend it once the face of cheque bouncing is prima facie established.

The burden is on him to disprove the allegations once a prima facie case is made out by the complainant".

(9.6). The Hon'ble Supreme Court in **Kishan Rao v. ShankarGouda, 2018 (8) SCC 165** wherein the Hon'ble Supreme Court has emphasized about the presumption referring the remarkable decision **Rangappa v.SriMohan 2010 (11) SCC 441** that the cheque is presumed to be supported by consideration and it is for the Accused to rebut the presumption.

**மாற்று முறை ஆவணச் சட்டம் பிரிவு 118 மற்றும் 139 கீழான அனுமானத்தை பொறுத்தவரையில் புகார்தாரர் சரியான முறையில் தனது வழக்கினை நிரூபணம் செய்துள்ளார்.**

**10. இந்திய சாட்சிய சட்டம் பிரிவு114(g) பின்வருமாறு கூறியுள்ளது :**

Sec114 Court may presume existence of certain facts. The Court may presume the existence of any fact which it thinks likely to have happened,regard being had to the common course of natural events, human conduct and public and private business, in their relation to the facts of the particular case. Illustrations the Court may presume

(g) That evidence which could be and is not produced would, ifproduced, be unfavourable to the person who withholds it;

***11.Admitted facts need not to be proved:***

***Sec 58 of Evidence Act:***

*Facts admitted need not be proved. No fact need to be proved in any proceeding which the parties thereto or their agents agree to admit at the hearing, or which, before the hearing, they agree to admit by any writing under their hands, or which by any rule of pleading in force at the time they are deemed to have admitted by their pleadings: Provided that the Court may in its discretion require the facts admitted to be proved otherwise than by such admissions.*

12) எதிரி தரப்பில் அவரது கட்சியினை நிரூபிப்பதற்கு எதிரி சாட்சி கூண்டில் ஏறி சாட்சியம் அளித்துள்ளார். அவரது தரப்பில் இரண்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அந்த ஆவணங்கள் எதிரி எடுத்துள்ள புகார்தாரரின் அனுமானத்தை மறுத்தலிக்கும் வகையில் இல்லை என இந்த நீதிமன்றம் கருதுகிறது. மேலும், குற்றவியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 251ன்படி நீதிமன்றம் விளக்கி வினவியபோது என்று பொய் வழக்கு என்று மறுத்துள்ளார். எதிரியானவர் தனது காசோலையை. தவறாக பயன்படுத்தி புகார்தாரர் எதிரி மீது வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று புகார்மனுவும் கொடுக்கவில்லை. அதற்கு ஆதரவாக எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை. வழக்கு காசோலை எதிரியின் காசோலை என்றும், காசோலையில் உள்ள கையெழுத்து எதிரியின் கையெழுத்து இல்லை என்றும் வெறுமனே எதிர்வாதம் செய்துள்ளார். கையெழுத்து தன்னுடையது இல்லை என நிரூபிப்பதற்கு எந்தவிதமான வல்லுநர் மூலம் கையெழுத்து தன்னுடையது இல்லை என நிரூபிப்பதற்கு எந்தவித முயற்சியும், நடவடிக்கையும் எடுக்கவில்லை என தெரியவருகிறது. வழக்கு காசோலை எதிரியின் வங்கி கணக்கு காசோலை என்று ஒப்புக்கொண்டுள்ளார். வழக்கு காசோலையானது போதிய பணம் இல்லை என்று திருப்பப்பட்டுள்ளது. எதிரியானவர் புகார்தாரர் அனுப்பிய வழக்கறிஞர்

அறிவிப்புக்கு எந்த விதமான பதிலும் அனுப்பவில்லை. மேலும் எதிரி தரப்பில் எவ்வித சாட்சியமும், எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. எதிரி தரப்பில் அனுமானத்தை மறுத்தலிக்கவில்லை (Preponderance of probabilities Defence) எதிரி தரப்பில் எடுக்கவில்லை என்பதால் புகார்தாரருக்கு மாற்றும் முறை ஆவண சட்ட பிரிவு 118(a) மற்றும் 139 அனுமானம் கிடைக்கத்தக்கது என இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**13.** புகார்தாரரிடம் இருந்து கடனாக பெறப்பட்ட தொகையை திருப்பி செலுத்துவதற்கு வழங்கப்பட்டுள்ள காசோலை தம்முடைய காசோலை என்று எதிரி ஒப்புக்கொண்டுள்ள நிலையிலும், எதிரியின் காசோலையை எதிரியின் கணவர் எடுத்துக்கொண்டு ஆறுமுகத்திடம் வாங்கிய கடனுக்கு கொடுத்துள்ளார் என்றும், அந்த காசோலையை புகார்தாரர் பெற்று இந்த வழக்கிற்காக அந்த காசோலையை தவறாக பயன்படுத்தி இந்த வழக்கை புகார்தாரர் தாக்கல் செய்துள்ளார் எனவும், எதிரி குறிப்பிட்டு இருந்த நிலையிலும் மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 139–ன் கீழான புகார்தாரருக்கு சாதகமாக உள்ள சட்டப்படியான அனுமானத்தை எதிரி மறுத்துரைக்க தவறிவிட்டதாக குறிப்பிட்டு புகார்தாரருக்கு ஆதரவாக **மாண்புமிகு நீதி அரசர் திருமதி. எஸ். ஆனந்தி அவர்கள் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை அமர்வு கிளையில் சி. ராஜா எதிர் L. திருமலைச்சாமி 2021 (1) TLNJ கிரிமினல் பக்கம் 150 என்ற வழக்கில் தீர்ப்பு** வழங்கியுள்ளார் .

14. எதிரி வழக்கு காசோலையை புகார்தாரரிடம் பெற்ற சட்டப்படியான கடன் தொகைக்கு கொடுக்கப்பட்ட காசோலை என்றும், கடன் தொகையை தீர்க்கும் வகையில் வழக்கு காசோலையை கொடுத்துள்ளார் என்றும், எதிரி சட்டப்படியான கடன் தொகையை தீர்ப்பதற்காக கொடுக்கப்பட்ட காசோலை மா.சா.1 என்றும், மா.சா.2 மூலம் திருப்பட்டு உள்ளதால் சட்ட வரைமுறை

காலத்திற்குள் மா.சா.3 மூலம் அறிவிப்பு கொடுக்கப்பட்டு உரிய கால வரையறைக்குள் பணம் கொடுக்கவில்லை என்று புகார்தாரர் தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால், மேற்படி புகார்தாரர் தரப்பில் மேற்கண்ட ஆறு உட்கூறுகளையும் **initial burden** நிரூபித்துள்ளார் என இந்த நீதிமன்றம் முடிவு செய்து எதிரி குற்றவாளி என தீர்ப்பளிக்கப்படுகிறது.

15. மாண்புமிகு உச்ச நீதிமன்றம் நஷ்ட ஈடு குறித்து பின்வரும் கருத்து செரிமிக்க தீர்ப்பு வழங்கி உள்ளது.

**Hon'ble Madras High Court Judgment in Spenser David - Vs - Virjin Mery Date:06.04.2010 Hon'ble Justice Mathivanan as held in para 20 as under**

"20 Merely finishing the accused by sending her to the prison or directing to pay certain fine amount will not in any way helpful to the complainant to recover the money from the accused. As rightly in observe in ..**As rightly in observe in Gova Plast (b) -Vs- Chico Ursula D "Sousa 2014Supreme court of Criminal 2019.**The filling of suit for recovery of the amount from the accused is a long drawn process and an unscrupulous drawer formally takes various tees to defeat then genuine claim of the payee. Therefore it has become necessary to follow the decision of this court in **R.Sirdhar Verus T.K. Rajendra Sha 2008 to MLJ Criminal 5,** 26 Accordingly, this court is of considered few that awarding the cheque amount vis., Rs. 2,50,000/- as compensation to be paid by the accused to the complainant would meet the endorsed justice apart from sent-ency of bill rising of the court.

16. இந்த வழக்கு கடந்த 08.02.2024–ம் தேதி கோப்புக்கு எடுக்கப்பட்டு இந்நாள் வரை நிலுவையில் இருந்ததால் புகார்தாரருக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்கு அவர் செய்கின்ற செலவுகளுக்கும் குற்றவியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 357(3)ன்படி இழப்பீடு வழங்க வேண்டியது அவசியம் என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

17. மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138–ன் படி குற்றம் செய்து இருப்பதாக முடிவு செய்யப்பட்டுள்ளதால் எதிரிக்கு வழங்கி இருக்கும் தண்டனை குறித்து கேள்வி கேட்டபோது குறைந்தபட்ச தண்டனை வழங்குமாறு வேண்டினார்.

i). **முடிவாக, எதிரியை மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138–ன்படி குற்றவாளி என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்து குற்றவியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 255(2)–ன் கீழ் எதிரிக்கு ஒரு வருட காலம் மெய் காவல் சிறை தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

**ii). இந்த தீர்ப்புரை பகரப்பட்டதிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் வழக்கு காசோலைத் தொகையான ரூ.4,60,000./–த்தை குற்றவியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 357(3)ன் படி நஷ்ட ஈடாக எதிரி புகார்தாரருக்கு கொடுக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது. நஷ்ட ஈட்டுத் தொகையை செலுத்த தவறினால் குற்றவியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 431 மற்றும் உடன் இணைந்த பிரிவு இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 64ன் படி எதிரிக்கு மேலும் 6 வாரம் காலம் மெய் காவல்சிறை தண்டனை விதித்து உத்தரவிடப்படுகிறது.**

18. தீர்ப்பின் நகல் எதிரிக்கு இலவசமாக வழங்க உத்தரவிடப்படுகிறது. எதிரி எழுதிக் கொடுத்துள்ள பிணைய பத்திரமும் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு இரத்தாகிவிடும் என்று இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து பிழை திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் 2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 02–ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ASHOKUMAR R

Digitally signed by ASHOKUMAR R
Date: 2026.07.02 14:13:50 +0530

நீதித்துறை நடுவர்,
மணப்பாறை.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>:

1. ம.சா.1 – திரு. மாணிக்கவாசகம்

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>:–

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | : | 20.11.2023–ம் தேதியிட்ட காசோலை அசல் |
| ம.சா.ஆ.2 | : | 22.11.2023–ம் தேதியிட்ட ரிட்டன் மெமோ |
| ம.சா.ஆ.3 | : | 12.12.2023–ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு |
| ம.சா.ஆ.4 | : | 18.12.2023–ம் தேதியன்று மேற்டி அறிவிப்பை எதிரி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை |
| ம.சா.ஆ.5 | : | 21.12.2023–ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு Unclaimed என்று திருப்பப்பட்டதற்கான அஞ்சலக உறை |

<u>எதிரி தரப்பு சாட்சிகள்</u>

எம.சா.1 – திருமதி. சுனிதா

**<u>எதிரி தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| | | |
|---|---|---|
| எம.சா.ஆ.1 | : | எதிரி காவல்நிலையத்தில் கொடுத்த புகார் |
| எம.சா.ஆ.1 | : | CSR (புகார் மனு ஏற்புச்சான்றிதழ்) |

ASHOKUMAR R
Digitally signed by ASHOKUMAR R
Date: 2026.07.02 14:13:55 +0530

நீதித்துறை நடுவர்,
மணப்பாறை.

**குறிப்பு**

1. வழக்கில் முடிவு பற்றி இருதரப்பினருக்கும் தெரிவிக்கப்பட்டது.
2. எந்த ஒரு சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைத்து விசாரிக்கப்படவில்லை.
3. எதிரி ஆஜர் தீர்ப்பின் நகல் இலவசமாக வழங்கப்பட்டது.
4. எதிரி குற்றவாளி என தீர்மானிக்கப்பட்டதால் தீர்ப்பின் முடிவு ஒத்திவைக்க கோரி எதிரிதரப்பில் தாக்கல் செய்யப்பட்ட CRMP /2026 மனுவின் பேரில் தேதிவரை ஒத்திவைக்கப்படுகிறது.